விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 162 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 16 திங்கட்கிழமை (30.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மருத்துவபீட மாணவர்கள் பேரணி படையினர் கண்ணீர்ப்புகை தாக்குதல்



(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக ஸ்திரமின்மைக்கு தீர்வு காணுமாறு கோரி மருத்துவபீட மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் விஹார மகாதேவி பூங்காவிற்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான இப்போராட்டம் டெக்னிக்கல் சந்தி வழியாக பெட்டாவை நோக்கி பேரணியாகச் சென்றது. 15

## தீயில் எரிந்த பெண் உயிரிழப்பு

(கரணவாய்)

2 வாரங்களுக்கு முன்பு மண்ணெண்ணெய் உடலில் பட்ட நிலையில் எரிகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் 15

## முட்டை, இறைச்சி விலைகள் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில், முட்டை ஒன்றின் 15

# அமைச்சரவை அமைச்சர்களே நெருக்கடிக்கு முழுக் காரணம்!

## பிரதமர் ரணில் குற்றச்சாட்டு



*(கொழும்பு)*

**20ஆவது திருத்தச் சட்டம் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன.**

**இதனால் நெருக்கடியைத் தடுக்கும் வகையில் பாராளுமன்றம் செயற்படவில்லை. அமைச்சரவை அமைச்சர்கள் அனைத்தையும் திட்டமிட்டு கட்டுப்படுத்தியுள்ளனர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.**

நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று, நம் நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகள் பொருளாதாரத்துறையில் மட்டுமல்ல அரசியல் வட்டாரத்திலும் இரண்டு முக்கிய பிரச்சினைகள் உள்ளன. 15

## குஜராத் சம்பியன்

ஐபிஎல் தொடரில் அசத்தல்



(குஜராத்)

15ஆவது பருவ காலத்துக்கான ஐபிஎல் தொடரில் ஹர்திக் பாண்ட்யா 16

## தமிழக அரசினால் மேலும் 30 ஆயிரம் தொன் அரிசி

(சென்னை)

இலங்கை மக்களுக்காக தமிழக அரசினால், மேலும் 30 ஆயிரம் தொன் அரிசி அனுப்பப்பட உள்ளது.

இதற்கமைய புதுக்கோட்டை,. திருச்சி, மதுரை உள்ளிட்ட 9 மாவட்டங்களில் உள்ள 70 அரிசி ஆலைகளில் இருந்து, 30 ஆயிரம் தொன் அரிசி தூத்துக்குடி துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அந்த அரிசியை தமிழக அரசின் முத்திரையுடன் கூடிய 10 கிலோகிராம் 15

## மாயமான நேபாள விமானம் கண்டுபிடிப்பு

### பயணித்த அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என அச்சம்

(காத்மண்டு)

நான்கு இந்தியர்கள் உட்பட 22 பயணிகளை ஏற்றிச் சென்ற நேபாள விமானம் விழுந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

A Tara Air's 9 NAET ரக விமானம் 4 இந்தியர்கள், மூன்று ஜப்பானி 15

## இலங்கை தொடர்பில் விசேட கவனம்

### உலக சுகாதார அமைப்பு



(ஜெனிவா)

இலங்கையில் நிலவும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யு ஆதரவு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப் 15

## யாழில் விபத்து; ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறுப்பிட்டி சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த [illegible] 16

## ஓய்வூதிய கொடுப்பனவு வழங்குவதிலும் சிக்கல்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார வளர்ச்சி பன்மடங்கு அமெரிக்க டொலர்களாக உயர்வடையும் வரை அரச சேவையில் எத்தரப்பினருக்கும் ஓய்வூதிய கொடுப்பனவினை வழங்குவது பொருத்தமற்றதாகும்.

நாட்டை முன்னேற்ற வேண்டுமாயின் அரச சேவையாளர்கள் குறைந்தது 10 வருட காலத்திற்கு தங்களின் வரப்பிரசாதங்களை விட்டுக்கொடுக்க வேண்டும் என அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியாவில் படையெடுத்த காட்டு யானைக் கூட்டம்



(குருமன்காடு)

வவுனியா இராமனூர் பகுதியில் யானைக்கூட்டங்கள் படையெடுத்துவந்தமையால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியா, புளியங்குளம், இராமனூர் பகுதியில் உள்ள மக்கள் குடிமனைகளை அண்டியதாக வயல்நிலங்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் அருகில்உள்ள சிறியகாடுகளின் ஊடாக 15 இற்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக வருகை தந்து வயல் வெளிகளில் நேற்று மாலை நடமாடித்திரிந்தன.

இதனால், அருகில் உள்ள குடிமனைகளுக்குள்ளும், அருகில் மேற்கொண்ட சிறுபோக நெற்செய்கை வயல்களுக்குள்ளும் யானைகள் வந்துவிடுமா என்ற அச்சத்துடன் அப்பகுதி மக்கள் இருந்துள்ளனர். எனினும் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக வயல் பகுதியில் நடமாடிய யானைக்கூட்டம் பின்னர் காட்டை நோக்கி திரும்பிச் சென்றுள்ளது. இவ்வாறு யானைக்கூட்டம் அவ்வப்போது வந்துசெல்வதால் அச்சத்துடன் வாழ்வதாக தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் தமது பகுதிக்கு யானை வேலிகளை அமைத்து தருமாறும் கோரியுள்ளனர். (4-7-250)


## சமையல் உதவியாளர் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர் (ஆண்) உடன் தேவை. காலை 10 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.

(11660)

**077 296 4899**


# கச்சதீவு இந்தியாவிடம் சென்றால் மீனவர்களின் நிலைமை மோசமடையும்

## சித்தார்த்தன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கச்சதீவை இந்தியாவிடம் வழங்கினால் வடக்கு, கிழக்கு மீனவர்களின் நிலைமை இன்னும் மோசமடையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் தற்போது மன்னார் கடற்கரை முதல் பருத்தித்துறை கடல் வரை அத்துமீறிய பீன்பிடியில் ஈடுபடுவதனை காணக்கூடியதாக உள்ளது.

மீன் வளங்களை அழிப்பதுடன், தொழில் வளங்களையும் அழிக்கிறார்கள், எனவே கச்சதீவினை இந்தியாவிற்கு கொடுப்பது சரியான நிலைப்பாடு அல்ல என்பதே எனது கருத்து.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும், இலங்கையின் சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் இடையில் 50 வருடங்களின் முன்பு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் அடிப்படையிலேயே, கச்சதீவு இலங்கையிடம் இருந்து வருகின்றது. ஆகவே மீண்டும் இந்த விடயத்தை தொடக்கி விடுவது ஒரு சர்ச்சையாகவே காணப்படுகின்றது என மேலும் தெரிவித்தார். (4-7)

# சா/த பரீட்சை எழுதிய 74 வயது முதியவர்

(கொழும்பு)

74 வயதுடைய முதியவர் ஒருவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

நெலுவ களுபோவிட்டியன பகுதியில் வசிக்கும் கலன் கொடகே சந்திரதாச என்ற வயோதிபரே இவ்வாறு பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற ஆசையின் காரணமாக அவர் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களுக்கு தோற்றியுள்ளார்.

கற்றது எதுவும் வீணாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

# சிறுமி ஆயிஷா கொலை; 20 பேரிடம் வாக்குமூலம்

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தின் அட்டுளுகம பிரதேசத்தில் 9 வயதுச் சிறுமி ஆயிஷா உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

நான்கு பொலிஸ் குழுக்களின் ஊடாக இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை சிறுமியின் தந்தை உட்பட 20 பேரிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய் துள்ள போதிலும், குழந்தையின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் சரியான தகவல்கள் இதுவரை தெரியவரவில்லை என அவர் கூறியுள்ளார். (4-7)




## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### நயினாதீவு

**2022 ஆம் ஆண்டுக்கான உயர்திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடைதேங்காய் பெற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்.**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உயர்திருவிழா 29.06.2022 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 14.07.2022 ஆம் திகதியன்று நிறைவு பெறவுள்ளது.

இக் காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும் உடைதேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 04.06.2022 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

குறிப்பு :
- குளிர்பானக்கடைகள் நடத்துபவர்கள் முறையான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.
- தேனீர்க்கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத் தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

அன்னையின் பணியில்
**திரு. ந. மோகனரூபன்**
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-4388)


# மரண அறிவித்தல்

பிறப்பு 17 - 08 - 1947



இறப்பு 29 - 05 - 2022

## திருமதி சிவமணி தவச்செல்வம்

புலோலி தெற்கு, மந்திகையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமணி தவச்செல்வம் அவர்கள் நேற்று *(29.05.2022)* ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் - பொன்மலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரையப்பா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தவச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசேந்திரா மற்றும் இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி, காலஞ்சென்ற சறோஜினிதேவி ஆகியோரின் மைத்துனியும் சிவஜினி, சிவநீதன், சிவஈசன் (கனடா), சிவறமி ஆகியோரின் பாசமிகு தாயாரும் கஜேந்திரன் அவர்களின் பாசமிகு மாமியாரும் மாதுஜன், ரிஷாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(30.05.2022)* திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-4389)

**076 448 6159** நகவல் :- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாவிட்டால் விலகி செல்வேன்

## — ரணில் பகிரங்கம் —

(கொழும்பு)

**அச்சம் கொள்ள வேண்டாம். நான் உறுதியளித்தது போன்று அனைத்து விடயங்களையும் நேரடியாகவே கண்காணித்து வருகின்றேன். முடியாவிட்டால் விலகி செல்வேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

21 ஆவது திருத்தம் குறித்து அமைச்சர்கள் மற்றும் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"21 ஆவது திருத்தம் தொடர்பில் நீதியமைச்சர் அனைத்து விடயங்களையும் கையாண்டு வருகின்றார். இவ்வாரத்தில் கட்சி தலைவர்களுக்கு முழுமையான வரைபு அனுப்பி வைக்கப்படுவதுடன் அடுத்த பாராளுமன்ற அமர்வில் கொண்டு வரப்படும்.

எந்தவொரு அமைச்சு பதவிகளுக்கும் ஊதியமோ கொடுப்பனவோ வழங்கப்பட மாட்டாது.

அதே போன்று சுதந்திர கட்சிக்கு உரிய இராஜாங்க அமைச்சுக்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ



இவ்வாரம் தீர்மானிப்பார்" எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# பணம் கொடுத்தாலும் எந்தவொரு நாடும் உரம் தராது

## சிறுபோகத்திற்கான உரம் போதியளவு கிடைக்காது என்கிறார் மகிந்த அமரவீர

(கொழும்பு)

எதிர்வரும் சிறுபோகத்தில் பயிர்ச்செய்கையாளர்களுக்கு போதியளவு உரம் கிடைக்கப் பெறாது எனவும் உரத்தைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலவுவதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறுபோக பயிர்ச்செய்கைக்கான உர விநியோகம் தொடர்பில் கருத்து வினவப்பட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் பணம் கொடுத்தாலும் உரம் வழங்க எந்த நாடும் தயாராக இல்லை. ஏனெனில் உலகளாவிய உணவுப் பஞ்சம் ஒன்றைக் குறித்த எதிர்வு கூறல் காரணமாக எந்த நாடும் உரம் விற்பனை செய்ய தயக்கம் காட்டுகின்றன.

இந்தியாவில் இருந்து நாம் உரம் பெற்றுக்கொள்வதாயினும் இந்தியாவும் வேறு நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்து நமக்கு வழங்க வேண்டியுள்ளது.

எனவே தற்போதைக்கு சிறுபோக பயிர்ச்செய்கையின் போது உரம் வழங்குவதற்கான உறுதிமொழியை வழங்க முடியாதுள்ளது.

ஆயினும் பெரும்போக பயிர்ச் செய்கைக்காவது தட்டுப்பாடின்றி உரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இப்போதே நாம் முன்னெடுக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களில் உள்நாட்டு உணவுப் பொருட்கள் பயிரிடப்படுவதன் மூலமாக மட்டுமே நம் நாட்டில் ஓரளவுக்கேனும் உணவுப் பஞ்சம் ஏற்படாமல் பாதுகாக்க முடியும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி-6)

## 2023 இல் பொதுத்தேர்தல்

# பொதுத் தேர்தலுக்கு முன் ரணிலை பதவி நீக்க திட்டம்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு முதல் மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்தப்படலாம்.

எனினும் தற்போதைய பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட நாளில் இருந்து இரண்டரை ஆண்டுகள் பூர்த்தியாகும் வரை ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது.

இதனிடையே பாராளுமன்றம் கலைக்கப்படும் முன்னர் மீண்டும் அரசாங்கத்தை கைப்பற்ற பொதுஜன பெரமுன தயாராகி வருவதாகவும் பெரும்பாலும் இந்த ஆண்டின் இறுதிக்குள் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து நீக்கி விட்டு, பொதுஜன பெரமுனவின் தனி அரசாங்கத்தை அமைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# உலக சந்தையில்

## உச்சம் தொட்டது எரிபொருள் விலை

(வோஷிங்டன்)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு மாத இடைவெளியில் உச்சத்தை எட்டியுள்ளது.

பிரண்ட் கச்சா எண்ணெய் பரல் ஒன்றின் விலை நேற்று 120 அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

ஏப்ரல் இறுதியில் 107 அமெரிக்க டொலராக இருந்தது.

நீடித்து வரும் ரஷ்யா - உக்ரைன் போரும் இந்த எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு காரணம் என கூறப்படுகிறது. (நி)

# தங்கத்தின் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

உலகளவில் தங்கம் விலை மீண்டும் உயர்ந்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க டொலரின் மதிப்பு தொடர்ந்து சரிவடைந்து வருவதால், தங்கத்தின் விலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கமைய, வார இறுதியில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1,853 அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளதென உலக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்து இரண்டாவது வாரமாக தங்கம் விலை உயர்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. இதேவேளை ரூபாவின் பெறுமதியை கடந்த இரண்டு வாரங்களாக நிலையானதாக பேணி வருவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 13 ஆம் திகதி முதல் அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி 364 ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## எரிவாயு விநியோகம் புதன்கிழமை ஆரம்பம்

(கொழும்பு)

நாளை மறுதினம் புதன்கிழமை முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பிக்கப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## கடவுச்சீட்டு பெறுவோர் அதிகரிப்பு

(கொழும்பு)

நாளாந்தம் கடவுச் சீட்டினை பெற்றுக்கொள்வதற்கு 2 ஆயிரத்து 500 பேர் வரை முன் பதிவு செய்வதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் இதுவரையான காலங்களில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டால் தற்போதே அதிகமான கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிக எண்ணிக்கையிலானோர் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வதற்கு வருகின்றமையினால் பத்தரமுல்லையில் கடுமையான வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# வட பகுதிக்கான நிவாரணங்களுடன் இந்தியாவில் இருந்து காங்கேசன்துறைக்கு கப்பல்கள்

## டில்லி முடிவு

(கொழும்பு)

வடபகுதிக்குத் தேவையான உதவிகளை கொழும்பு துறைமுகம் ஊடாக நகர்த்தாமல் நேரடியாகவே காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அனுப்புவதற்கு இந்தியா உடன்பட்டுள்ளது.

இதன்மூலமாக எதிர்வரும் நாட்களில் காங்கேசன்துறை துறைமுகம் பரபரப்பாக இயங்கும்.

குறிப்பாக வட மாகாணத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள், உர வகைகளை இவ்வாறு வழங்க இந்திய வெளியுறவுத் தலைமை - இலங்கை கடற்றொழில் அமைச்சருடனான சந்திப்பின் போது முடிவு எட்டப்பட்டுள்ளது. (நி)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

## முன்னிலையாகுமாறு மகிந்த, நாமலுக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அழைத்து வாக்குமூலம் பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அமைதிப் போராட்டத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் அமைதியின்மை தொடர்பாக வாக்குமூலம் பெற்றுக்கொள்ளவே முன்னாள் பிரதமர் அழைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு மேலதிகமாக நாமல் ராஜபக்ஷ, ரோஹித அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன ஆகியோரையும் நாளை மறுதினம் புதன்கிழமை முன்னிலையாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையாக அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற கலவரத்தில் வடரெகா சிறைச்சாலையில் கைதிகள் குழுவொன்று ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்கே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

சிறைக் கைதிகள் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் முன்னதாக ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமை ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு மேல் மாகாண பொலிஸ்மா அதிபர் மற்றும் தேசபந்து தென்னகோன் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் சேலஞ்ச் இருபது-20

# கிண்ணம் வென்றது சூப்பர் நோவாஸ்



மகளிருக்கான 4 ஆவது சேலஞ்ச் இருபது- 20 கிரிக்கெட் போட்டி தொடர் மகாராஷ்டிரா மாநிலம் புனே நகரில் நடை பெற்று வந்தது.

மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்க மைதானத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற இறுதி ஆட்டத்தில், சூப்பர் நோவாஸ் மற்றும் வெலாசிட்டி அணிகள் மோதின.

டாஸ் வென்ற வெலாசிட்டி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதை அடுத்து களமிறங்கிய சூப்பர் நோவாஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 165 ரன்கள் குவித்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக டாட்டின் 44 பந்துகளில் 4 சிக்சர்கள் 1 பவுண்டரி உட்பட 62 ரன்கள் குவித்தார். கப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 43 ரன்கள் அடித்தார்.

இதை அடுத்து 166 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய வெலாசிட்டி அணியில் அதிகபட்சமாக லாரா வெல்வெட் 65 ரன்கள் குவித்தார். மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்களுடன் வெளியேறினர்.

20 ஓவர் முடிவில் வெலாசிட்டி அணி 8 விக்கெட்டுகளை இழந்து 161 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சூப்பர் நோவாஸ் அணி 3 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. (4)

## 14 ஆவது முறையாக

# சம்பியன் வென்றது ரியல் மாட்ரிட்




பாரிஸில் நடந்த சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரில், ரியல் மாட்ரிட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

கால்பந்து உலகின் மிகப் பெரிய தொடரான சம்பியன்ஸ் லீக்கின் இறுதிப்போட்டி பாரிஸில் நடந்தது. ரியல் மாட்ரிட் மற்றும் லிவர்பூல் அணிகள் இதில் மோதின.

ஆட்டத்தின் 59வது நிமிடத்தில், ரியல் மாட்ரிட் வீரர் வினிசியஸ் ஜூனியர் கோல் அடித்தார். ஆனால் லிவர்பூல் அணியால் கடைசி வரை பதில் கோல் அடிக்க முடியவில்லை.

இதனால் ரியல் மாட்ரிட் 1-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் 14வது முறையாக சம்பியன்ஸ் லீக் பட்டத்தை அந்த அணி வென்றது.

இந்தப் போட்டியில் மொத்தமாக 20 முறை லிவர்பூல் வீரர்கள் கோல் அடிக்க முயன்றனர்.

ஆனால் ரியல் மாட்ரிட் கோல் கீப்பர் கோர்டோயிஸ் தன்னிடம் நேராக வந்த 9 கோல்களை தடுத்து அசத்தினார். (4)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2627

### துஸ்யந்தன்



உன்னுடைய வாளை அதன் உறையில் திரும்பப் போடு. வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர்

### தர்சினி



இருபது நிமிடங்கள் மின்தடை ஏற்பட்டதற்காக மக்கள் முன் இருபது நிமிடங்கள் தலை குனிந்து நின்றார் ஜப்பான் மின்சாரத்துறை அமைச்சர்!

### பாலமுரளி

உன்னை கவலை
படுத்தும் அளவுக்கு
ஒருவனுக்கு துணிச்சல்
இருந்தால்
அதையும் தாண்டி
மகிழ்ச்சியாக
இருக்கும் அளவிற்கு
உன்னிடம் தைரியம்
இருக்க வேண்டும்.

### சாயினி


எங்கே 'ஆறுதல் கிடைக்கும்'
'நிம்மதி இருக்கும்'
'சந்தோசம் கிடைக்கும்'
என்று நினைக்கிறமோ
அங்கிருந்துதான் அதிக
வேதனையும் வலிகளும்
ஏமாற்றங்களும் மனச் சுமையும்
கிடைக்கின்றன.

### நிலோஜன்

எல்லோருக்கும் நீ
நம்பிக்கைக்கு உரியவனாய்
இரு. ஆனால் யாரையும்
நம்பிவிடாதே... உயிராக
நேசித்த உறவு கூட
உன்னை விட்டு
பிரியலாம்.

### சம்யுதா

நாம் மாட்டு வண்டி பின்னாடி தொங்குறதும் வண்டிக்காரர் திட்டுவதும் அது ஒரு சூப்பர் பீலிங்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை உற்பத்தியில் வீழ்ச்சி

## 73 மில்லியன் டொலர் வருமானம் இழப்பு

(கொழும்பு)

**2022 முதல் காலாண்டில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதால் 73 மில்லியன் டொலர் வருமானம் இழக்கப்பட்டுள்ளது என தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத்தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார்.**



இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடையின் விளைவாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

இதேவேளை 50 கிலோ கொண்ட பசளை மூடையின் விலை 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இரசாயனப் பசளையின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் இரசாயன பசளை பாவிப்பதை கைவிட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் கொழுந்து உற்பத்தி குறைந்துள்ளது. தேயிலைக் கொழுந்தின் தரமும் குறைந்துள்ளதாகவும் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளுக்கு நாள் தேயிலை உற்பத்தி குறைந்து உலக சந்தையில் எமக்குள்ள இடத்தை ஏனைய நாடுகள் கைப்பற்றும் சூழ்நிலை உருவாகும் எனவும் லயனல் ஹேரத் அச்சம் வெளியிட்டுள்ளார். (நி-6)

# மருந்துத் தட்டுப்பாடு

## இரண்டு மாதங்களில் தீர்க்கப்படும்

### சுகாதர அமைச்சர் வெளியிட்ட மகிழ்ச்சித் தகவல்

(கொழும்பு)

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இலங்கையில் நிலவும் மருந்துத் தட்டுப்பாடு பிரச்சினை, இரண்டு மாதங்களுக்குள் தீர்க்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மருந்து இறக்குமதிக்காக 400 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

மருந்துகளை கோரியதன் பின்னரே மருத்துவ நிறுவனங்கள் அவற்றின் உற்பத்தி பணிகளை ஆரம்பிக்கும் என்பதால், மருந்துகளை இறக்குமதி செய்ய மூன்று மாதங்கள் ஆகும்.

எனினும் இந்த விடயம் தொடர்பில் முன்னணி மருந்து நிறுவனங்களிடம் கலந்துரையாடப்பட்டுள்ளதோடு, இரண்டு மாதங்களுக்குள் அவர்கள் மருந்துகளை விநியோகிப்பதாக உறுதியளித்துள்ளனர்.

உயிர்காக்கும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருட்களுக்காக தட்டுபாட்டை கட்டுப்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா என்பன உதவிகளை வழங்குவதாக அறிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (நி-6)

# மகிந்தவுக்கு தீவிர பாதுகாப்பு

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை பலப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார்.

முன்னாள் பிரதமர் மகிந்த மீது பல்வேறு தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி பயணிக்கும் இடங்களிலும் நிரந்தரமாக தங்கியிருக்கும் இடங்களிலும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அதற்கமைய, மகிந்த ராஜபக்ஷ மீது எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குதல் நடத்தப்படலாம் என்பதனால் உச்சபட்ச பாதுகாப்பை வழங்குவது உகந்தது என புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவின் வாசஸ்தலத்திற்கு செல்லும் பாதையை மறைக்கும் வகையில் வீதித் தடைகளை அமைக்குமாறு மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் பணிப்புரை விடுத்துள்ளார். (நி-6)

# வீடுகள், தொழிற்சாலைகளுக்கு சூரிய சக்தி ஊடாக மின்சாரம்

(கொழும்பு)

வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு சூரிய சக்தியின் ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக பகல் வேளையில் மின்சாரத்தை பெறமுடியுமாயின் தற்போது மின்னுற்பத்திக்காக பயன்படுத்தப்படும் நீர் மற்றும் எரிபொருளை பயன்படுத்தி இரவு வேளையில் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும்.

இதற்கமைய 24 மணிநேரமும் துண்டிப்பின்றி மின்சாரத்தை விநியோகிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக நுகர்வோருக்கு அனுமதியை வழங்குவதற்கும் அவசியமான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# இராசிபலன்

30.05.2022
வைகாசி 16, திங்கட்கிழமை
அமாவாசை பிற்பகல் 5.11 மணிவரை

கார்த்திகை காலை 7.43 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம் -சுவாதி

வளவன்

**மேஷம்**
வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தன்னம்பிக்கையும் துணிவும் ஏற்படலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்**
அதிஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்**
விட்டுக்கொடுத்துச் செல்வதால் முன்னேற்றம் காண்பீர்கள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ரோக பயமுண்டு, பிரயாண பயமுண்டு.

**மகரம்**
மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்**
பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்**
செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்**
கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்**
மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பது நல்லது, வியாபாரத்தில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கன்னி**
தொழிலில் இருந்த எதிர்ப்புகள் மாறும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு**
கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.

**மீனம்**
பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் வாய்ப்புண்டு.

உன் கடமையில் இருந்து தவறும் போது மட்டும் வருத்தப்படு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டால்

# நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யத் தயார்

(யாழ்ப்பாணம்)

**இதய சுத்தியுடன் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விற்கான முன்மொழிவுடன் ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை அரசாங்கம் முன் வைக்குமாக இருந்தால் அனைத்து தமிழ் மக்களும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கு தயாராக உள்ளனர்.**



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்ததன் பின்னர் மக்களை அச்சுறுத்தக்கூடிய வகையில், அறிக்கைகள் விடுவதைத் தவிர அவரால் எதுவும் செய்ய முடியவில்லை. மகிந்த தரப்பினர் தட்டாத அல்லது தட்ட முடியாத கதவுகளைத் தட்டி கடன்களைப் பெறுவதற்கான வல்லமை ரணிலுக்கு இருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த தனிப்பட்ட திறமையும் அவரிடமும் இல்லை.

ஒருவரிடமும் நாட்டை நுகர்வுப் பொருள் உற்பத்தியை அதிகரித்து, இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டம் இல்லை.

வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்வதற்கான அதிகாரங்களைத் தமிழ் மக்கள் கேட்ட பொழுது, அதனை குண்டுவீசி அழித்தீர்கள். அங்கிருந்த ஒருசில தொழிற்சாலைகளையும் குண்டுவீசி நிர்மூலமாக்கினீர்கள். வடக்கு-கிழக்கில்தான் இந்த கதி என்றால் நீங்கள் காலாதிகாலமாக ஆட்சி செய்யும் தென்பகுதியில் எத்தனை தொழிற்சாலைகளை உருவாக்கியிருக்கிறீர்கள்? அங்கும்கூட இன்று பாணுக்கும் பருப்பிற்கும் எரிபொருளுக்கும் எரிவாயுவிற்கும் மக்கள் நாளாந்தம் வரிசையில் நிற்கும் நிலையைத்தானே உருவாக்கியிருக்கிறீர்கள். குரங்கிற்குக் கூடு கட்டத் தெரியாது. ஆனால் அதற்கு பறவைகள் கட்டிய கூட்டை சின்னாபின்னமாக்கத் தெரியும். அதைப் போலவே இலங்கையை சீர்படுத்துவதற்குப் பதிலாக அதனைச் சின்னாபின்னப்படுத்தும் வேலையையே எமது ஆட்சியாளர்கள் அனைவரும் செய்து வந்திருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தேசிய இனப்பிரச்சினை தீராமல் நாடு அபிவிருத்தி அடையாது என்று கூறியுள்ளார்..

அதனை வரவேற்பது போன்று பிரதமர் ரணிலும் புலம்பெயர் உறவுகளின் முதலீட்டை எதிர்பார்த்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் தமிழர்கள் முன்புபோல் ஏமாறத் தயாரில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (4-6)

## சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத நிலையில் தொண்டைமானாறைச் சேர்ந்த எஸ்.செல்லத்துரை வயது 73 மற்றும் எம்.தியாகராஜா வயது 77 (விலாசம் தெரியாது) ஆகியோரின் சடலங்கள் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த இரு சடலங்களையும் அடையாளம் காட்டி உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.போதனா மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-6)


## வாளுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

அல்வாய் பகுதியில் வாளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அல்வாய் வட்டுவால் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் வாளுடன் நிற்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த இளைஞரை வாளுடன் கைது செய்துள்ளனர்.(4-6-60)



நல்லூர் மத்தியஸ்த சபையில் பத்தாண்டுகளை நிறைவு செய்த மத்தியஸ்தசபை உறுப்பிணர்களான மு.வாமதேவன், பா.கமலாவதி, ப.தர்மநாயகம்,ம.புஸ்பமதி, ச.ஜெயபாலச் சந்திரன் ஆகியோர் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சதீஸ்கரன் முன்னிலையில் அகில இலங்கைக்கான சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

## நீண்டநேரம் வரிசையில் காத்திருப்பதால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் அபாயம்

(சாவகச்சேரி)

கிடைக்கப்பெறும் எரிபொருளை சகலருக்கும் பங்கிட்டு வழங்குவதற்கான நடவடிக்கையை மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொள்ள வேண்டும் என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேசசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் நிலவி வருகின்ற நெருக்கடியான கால கட்டத்தில் எரிபொருளை நிரப்புவதற்கு பலரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். 3,4 மணி நேரங்கள் வரிசையில் காத்திருந்து எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வந்ததும் பெற்றோல் தீர்ந்து விட்டதென அறிவிக்கப்படுகிறது.

எனவே கிடைக்கப்பெறும் எரிபொருளினை எத்தனை வாகனங்களுக்கு பங்கிட்டு வழங்க முடியும் என கணித்து அந்தத் தகவலை வரிசையில் நிற்பவர்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் தெரியப்படுத்த வேண்டும்.

நெருக்கடி நிலைமை காரணமாக நாட்டில் பெரும்பாலானோர் போசாக்கு இன்றிக் காணப்படுகின்றனர். இந்த நிலையில் நீண்ட நேரம் வரிசையில் காத்திருப்பதால் உயிரிழப்புக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (4-6-30)



தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் கடந்த 22 ஆம் திகதி வட மாகாணத்திலுள்ள 15 பாடசாலைகளுள் யாழ்ப்பாணத்திலுள்ள 10 பாடசாலைகளிலும் வவுனியாவிலுள்ள 4 பாடசாலைகளிலும் முல்லைத்தீவிலுள்ள ஒரு பாடசாலையிலும் கல்வி பயிலுகின்ற 889 மாணவர்களிற்கு 20 லட்சம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள், சீருடைகள், காலணிகள், புத்தகப்பைகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய 13 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் 2022 எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நம்பிக்கை நிதிய தலைவர் க.இராசையா தலைமையில் இடம்பெறவுள்ளது.(4-6-60)



மண்டைதீவு மகா வித்தியாலயம்,மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும் மண்டைதீவு வழிப் பிள்ளையார் கோவில் பரிபாலனசபை செயலாளருமான கைலாசபிள்ளை விக்னேஸ்வரன் (விக்னா) கடந்த 26 ஆம் திகதி மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி. இரா.கண்ணன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் முன்னாள் மண்டைதீவு சேர்மன் அமரர் . கைலாசபிள்ளையின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சம் ஏற்படுவது உறுதி

# உணவை வீணடிப்பதை தவிருங்கள்

## மக்களிடம் கோரிக்கை விடுக்கும் பேராசிரியர் புத்தி மாரம்பே



(கொழும்பு)

**உணவுகளை வீணடிப்பதை முடியுமான அளவு குறைக்க வேண்டும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே வலியுறுத்தியுள்ளார்.**

எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உணவுத் தட்டுப்பாடுக்கு முகங்கொடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இது அமையும்.

உணவுத் தட்டுப்பாடு ஏற்படவுள்ளமையை சந்தேகத்திற்கு இடமின்றி கூறக் கூடிய நிலை உருவாகியுள்ளது. அதற்காக அச்சமடைந்து பதற்றமடைவதற்காக இந்தத் தகவல் வெளியிடப்படவில்லை.

தற்போது முதல் அதற்கு முகங்கொடுப்பதற்கு தயாராக வேண்டும் என்பதற்காக இவ்வாறு அறிவுறுத்தப் படுகிறது.

இதன் ஒரு படியாக முடியுமான அளவு உணவுப் பொருட்களை வீணடிப்பதை குறைக்க வேண்டும். தேவையான அளவு உணவை மாத்திரம் தயார் செய்ய வேண்டும். அதனூடாக உணவு வீணடைவதை தவிர்க்க முடியும்.

அத்துடன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான தொகையை கட்டுப்படுத்த முடியும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார். (நி-6)

## ரயிலில் மோதி 6 வயது சிறுமி உயிரிழப்பு

(கொழும்பு)

கொஸ்கொடவை அண்மித்த பியகம புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ரயிலில் மோதி 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ரயில் கடவைக்கு அருகில் சென்று கொண்டிருந்த இரு சிறுமிகளில் ஒருவர் மருதானையில் இருந்து பெலியத்த நோக்கி பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் பியகம, ஹேகல்ல பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த சிறுமியின் சடலம் பலபிட்டிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், கொஸ்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-6)

## அரச செலவினங்களை குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரச செலவுகள் 250 பில்லியன் ரூபாவினால் குறைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த ஆண்டுக்கான செலவுகளை 250 பில்லியன்களினால் குறைப்பது குறித்த வழிமுறைகளை திறைசேரி பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கனவே இந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு. செலவுத் திட்டத்திற்கு பதிலீடாக இடைக்கால வரவு செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அதில். குறிப்பாக அரசாங்கத்தின் மூலதன செலவுகள் வெகுவாக குறைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் செலவு குறைப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பரிந்துரை செய்துள்ளார்.

வரி வருமானங்களை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆறு வாரங்களுக்குள் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், எதிர்வரும் நாட்களில் பணவீக்கம் அதிகரிக்கும் எனவும் இதனால் மக்கள் போராட்டம் நடத்தலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டின் 22 மில்லியன் மக்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவ நிதி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)

## 21 வது திருத்தத்திற்கு முழுமையான ஆதரவு மைத்திரி பால சிறிசேன

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை முழுமையாக ஆதரிப்பதாக அக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வரைவில் உள்ள அனைத்து திருத்தங்களுக்கும் உடன்படுவதாகவும் மேலும் பல முன்மொழிவுகளும் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்தார். (நி-6)

# நெருக்கடியான சூழலில் இலங்கை; கைகொடுப்பது எமது கடமை

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங் தெரிவிப்பு

(கொழும்பு)

நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு பக்கபலமாக நின்று அனைத்து வழிகளிலும், அதற்கு உதவுவது புதுடில்லியின் கடமை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ் நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு அத்தியாவசிய உதவி மற்றும் மருந்துப் பொருட்களை ஏற்றி வந்துள்ள இந்தியக் கடற்படையின் ஐ.என்.எஸ். காரியல் கப்பலின் மாலுமிகளுடன் நடத்திய மெய்நிகர் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை, இந்தியாவின் அண்டை நாடாக மாத்திரமன்றி, இந்தியாவின் பழைய நண்பனாகவும் உள்ளது. இந்தியா எப்பொழுதும் அண்டை நாடுகளுக்கு முதலிடம் என்ற கொள்கையைப் பின்பற்றுகிறது.

அத்துடன், இலங்கை, இந்தியாவின் மூலோபாய பங்காளியாகவும் நெருங்கிய கடல்சார் பங்காளியாகவும் உள்ளது.

ஆகவே, நெருக்கடியான நேரத்தில் இலங்கையுடன் நின்று, அதற்கு சாத்தியமான எல்லா வழிகளிலும் உதவுவது இந்தியாவின் கடமையாகும்.

ஐ.என்.எஸ். காரியல் கப்பல் மற்றும் பிற இந்திய கடற்படைக் கப்பல்கள் நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்வதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் நிலை பாதுகாப்பாக இருப்பதாக நான் நம்புகிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## பொருளாதார நெருக்கடியை ரணில் வெற்றி கொள்வார்

### பாட்டலி சம்பிக்க நம்பிக்கை



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இதற்கு முன்னரும் 2001 ஆம் ஆண்டில் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது ரணில் விக்கிரமசிங்கவால் அதனை வெற்றிகொள்ள முடிந்தது.

இம்முறையும் அவர் அதனை வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கை உண்டு.

அதற்கு அனைவரும் பிரதமர் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த நெருக்கடிகள் தீராது போனால் நாடு முழுவதும் பாரிய எதிர்ப்பு வெடிக்கும்" என்றும் சம்பிக்க ரணவக்க எம்.பி. எச்சரித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 58

### அன்புள்ள அம்மாவுக்கு...

# நீ செய்த தியாகங்களை நானும் செய்யத் தயாராகி விட்டேன்

அண்மையில் திருமணமான பெண் தன் அம்மாவுக்கு எழுதிய கடிதம்

அன்புள்ள அம்மா,

எல்லா பெண்களைப் போலவே கல்யாண கனவில் களித்து மனதைக் கொள்ளையடித்தவரை உங்கள் சம்மதத்துடன் குதூகலமாக ஆடம்பரமாக திருமணம் புரிந்து கொண்டேன் .



பின்னர் தான் தெரிந்தது வாழ்க்கை சினிமாவில் போடும் சுபத்திற்கு பின்பு தான் தொடங்குகிறதென்று.

வாழ்க்கையில் விரும்புவது, விரும்பப்படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது என்று தெரிய வருகிறது.

எத்தனை பொறுப்புகள்?

எத்தனை சுமைகள்?

எத்தனை எதிர்பார்ப்புகள்?

எத்தனை தியாகங்கள்?

எத்தனை ஏமாற்றங்கள்?

நினைத்த நேரத்தில், நிம்மதியாக முழு தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை...

குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டி இருக்கு...

உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்ற விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேன்...

இங்கே அவர்கள் விரும்பிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர்...

இதோ என் தோழியை/தோழனைப் பார்த்து விட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டு சென்றது போல் சொல்லிச் செல்ல இயலவில்லை.

என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு...

நினைத்த நேரத்தில் தூங்க கூட முடிவதில்லை...

எனக்கு விருப்பமான தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை...

சில நேரங்களில் எதற்கு இந்த திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது...

இந்த திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்து விட்டது...

என் சுயத்தை அல்லவா சூறையாடி விட்டது.

உன்னிடம் இருந்த போதே மிக மகிழ்வாக இருந்தேனே!

உன்னிடம் திரும்ப வந்து விடலாமா என்று கூட தோன்றுகிறது.

உன் மடியில் படுத்து கொள்ளனும் போல இருக்கிறது அம்மா!

வேண்டாம் வேண்டாம் என்று நான் சொல்ல சொல்ல ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ...

உனக்கு பிடிக்குமேன்னு பால் கோவா செஞ்சேன்னு நீ பின்னாலயே வந்து வந்து ஊட்டி விடுவதை கொஞ்சிக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

எந்தக் கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில் உன் கொஞ்சலில் உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்க கூடாதா என்று தோன்றுகிறது...

ஆனால் அடுத்த கணமே நீயும் என் வயதில் என்னை மாதிரி தானே உணர்ந்திருப்பாய்.

நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்கள் தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது...

நீ அன்று நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால் நான் இன்று இருப்பேனா?

நீ செய்த தியாகங்களையும் உழைப்பையும் பாசத்தையும் எதிர்பாரா அன்பையும் நான் திருப்பித் தர வேண்டாமா.. என்று நினைத்து கொள்கிறேன்...

அதுவும் உன்னிடம் இருந்து கற்றது தான்...

அப்படி நினைக்கும் போது வாழ்க்கையே எளிதாக தெரிகிறது... தெளிவாக புரிகிறது.

காலம் செல்ல செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல் நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன்...

நீ செய்த தியாகங்களை நானும் செய்யத் தயாராகி விடுவேன்...

உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை, திடத்தை என் குடும்பமும் எனக்குத் தரும்.

ஆமாம், அம்மா நீஎனக்கு கொடுத்ததை நானும் என்குடும்பத்திற்கு கொடுக்க தயாராகி விட்டேன்...

நன்றி அம்மா.



Nagendram Kajendra

## வடகொரியா மீதான தடைக்கு ரஷ்ய-சீனா எதிர்ப்பு

(வோஷிங்டன்)

வட கொரியாவின் சமீபத்திய பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளுக்குப் பதிலளிக்கும் வகையில், வட கொரியா மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை முன்மொழிந்த ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தன.

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட ஒன்பது முந்தைய தடைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய ரஷ்யாவும் சீனாவும், தற்போது பொருளாதாரத் தடை தீர்மானத்தை எதிர்த்து முதல்முறையாக வாக்களித்துள்ளன.

15 உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்பு சபையில் வாக்கெடுப்பு தீர்மானத்திற்கு ஆதரவாக 13-2 ஆக இருந்தது. ஆனால், ரஷ்யாவும் சீனாவும், தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி நிராகரித்தன. (நி)

## கிழக்கு... தாக்கு...

(கீவ்)

ரஷ்யப் படைகள் கி... தாக்குதலை தீவிரப்... கியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் உத்தரவிற்கமைய ரஷ்யப் படையினர் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி உக்ரைனில் இராணுவத் தாக்குதலைத் தொடங்கினர்.

உக்ரைன், நேட்டோ அமைப்பில் சேர்வதை எதிர்த்து ரஷ்யாவால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போர், கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக

# 22 பேருடன் சென்ற நேபாள விமானம் மாயம்

(நேபாளம்)

4 இந்தியர்கள் உட்பட 22 பேருடன் நேற்றுக்காலை புறப்பட்ட நேபாள விமானம் திடீரென மாயமாகியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேபாள நாட்டின் பொக்காரா நகரில் இருந்து ஜோம்சோம் நகருக்கு நேற்றுக் காலை புறப்பட்ட விமானத்தில் 4 இந்தியர்கள், 3 ஜப்பானியர்கள் உட்பட 19 பயணிகள் இருந்தனர். மற்ற அனைவரும் நேபாளத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களை தவிர மூன்று விமான ஊழியர்களும் விமானத்தில் இருந்துள்ளனர்.

இந்நிலையில், ஜோம்சோமின் முஸ்டாங் மாவட்டத்துக்கு மேலே விமானம் பறந்து சென்று கொண்டிருந்த போது திடீரென கட்டுப்பாட்டு அறையுடனான அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள் விமானியை பல முறை தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால் விமானியின் தொலைபேசி இணைப்பும் துண்டிக்கப்பட்டு விட்டது.

இதையடுத்து, சம்பந்தப்பட்ட விமானம் காணாமல் போனதாக நேபாள அரசு அறிவித்துள்ளது. விமானத்தைத் தேடும் பணியில் பேரிடர் மீட்புப் படையினரும், இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர். (நி-6)

# வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி பிரேசிலில் 35 பேர் பலி

(பிரேசிலியா)

பிரேசில் - வடகிழக்கு பகுதிகளில் பெய்துவரும் கனமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களில் சிக்கி 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த ஐந்து மாதங்களில் ஏற்பட்ட நான்காவது பெரிய வெள்ளப்பெருக்காக இது பதிவாகியுள்ளது.

வடகிழக்கு பெர்னம்புகோ மாகாணத்தில் மட்டும் அனர்த்தங்களில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளதாக பிரேசில் அரசாங்கம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வெளியிட்ட உத்தியோகபூர்வ தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க்கு உக்ரைனை கைப்பற்ற

# ...தலை தீவிரப்படுத்திய ரஷ்யா

...ர் கிழக்கு உக்ரைனை கைப்பற்றுவதற்காக ...ரப்படுத்தியுள்ளதாக தகவல் வெளியா...



நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உக்ரைனில், ரஷ்யப் படையினர் அந்த நாட்டுப் பெண்களை வன் கொடுமை செய்வது, பொதுமக்க ளைக் கொன்று குவிப்பது என சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாக உக்ரைன் தொடர்ந்து குற்றம் சாட்டி, உலக நாடுகளிடம் முறையிட்டு வருகிறது.

இந்தநிலையில், கிழக்கு உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் முகாமிட்டிருந்த ரஷ்ய இராணுவத்தினரை உக்ரைன் இராணுவத்தினர் குண்டுவீசித் தகர்த்தெறிந்தாக கூறப்படுகிறது.

உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் 2 ஆவது பெரிய நகரமாக கார்கிவ் ஐ கைப்பற்ற தவறிய ரஷ்யா, கிழக்கு உக்ரைன் பகுதிகளை கைப்பற்றும் முயற்சியில் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்களை குவித்து கடும் தாக்குதல் நிகழ்த்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி)

## வன்முறையாக வெடித்த மாணவர்களின் போராட்டம்

## பதற்றத்தில் சிலி



(சிலி)

தென் அமெரிக்க நாடான சிலியில் மாணவர்களின் போராட்டம் வன்முறையாக வெடித்தது.

உணவு மானியங்கள் தொடர்பாகவும் கல்விக்கு கூடுதல் நிதி ஒதுக்கக் கோரியும், அந்நாட்டு கல்வி கொள்கைக்கு எதிராகவும் சாண்டியாகோவில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பேரணி மேற்கொண்டனர்.

இதற்கு பொலிஸார் எதிர்ப்புத் தெரிவித்ததால், இரு தரப்பினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் பொலிஸாரும் மாணவர்களும் மோதிக் கொண்டதால், கலவரம் மூண்டது.

இதனைத் தொடர்ந்து கண்ணீர் புகை குண்டுகளை வீசி கூட்டத்தை பொலிஸார் கலைத்தனர்.

பொலிஸ் வாகனங்களை மாணவர்கள் அடித்து உடைத்தனர். சம்பவங்கள் தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)



## உணவு பெற முண்டியடிப்பு நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் துயரம்






(நைஜர்)

நைஜீரியா - தெற்கில் ஏழை உள்ளூர் மக்களுக்கான இலவச உணவு விநியோகத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி கர்ப்பிணிப் பெண் மற்றும் சிறுவர்கள் உட்பட சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமைடைந்தனர்.

ஆலயம் ஒன்றில் ஏழை மக்களுக்கு உணவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதை அடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்.

இலவச உணவு மற்றும் பொருட்களைப் பெற பெருந்தொகையான மக்கள் முண்டியடித்துக்கொண்டு ஒரேயடியாக மண்டபத்திற்குள் நுழைய முயற்சித்த போது பெரும் நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 31 பேர் இறந்தனர்.

இதனையடுத்து உதவி வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களை நைஜீரிய பொலிஸார் கைது செய்தனர். (நி)

நகர்ந்துள்ளனர்.

பெர்னம்புகோவின் அண்டை மாகாணமான அலகோவாஸில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதாகவும் பிரேசிலின் கூட்டாட்சி அவசர சேவை தகவல்கள் தெரிவித்துள்ளன.

பெர்னம்புகோ மாகாணத்தில் நிலச்சரிவு [illegible] வெள்ளம் ஏற்படும் [illegible] உள்ள பகுதிகளில் சுமார் 32,000 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக பிரேசில் கூட் [illegible] தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை விட்டுக்கொடுக்க முடியாது

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு

(குருமன்காடு)

**கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. இந்தியா வின் பாதுகாப்பு விடயத்தில் இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.**



வவுனியாவில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளி க்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

கச்சதீவைப் பெறுவதென தமிழக முதல்வர் எண்ணியது கவலை தருகிறது. இந்த நிலை யில் கஷ்டமான நிலையைப் பயன் படுத்தி கச்சதீவை இந்தியா பெற முயல்வது ஏற்றுக் கொள்ள முடி யாது. கச்சதீவைப் பொறுத்த வரை அதில் எங்களது மீனவ ர்கள் பயன் பெறும் வாய்ப்பு கூட இருக்கிறது. கச்சதீவை விட்டுக் கொடுக்க முடியாது. அது தமிழர் களின் தீவாக உள்ளது.

வடக்கில் வாழும் தமிழர்கள் பயன்படுத்தும் தீவாக இருக்கின்ற போதும், இந்தியாவிற்கு பங்கம் ஏற்படும் வகையில் அதனை பயன்படுத்த தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதியளிக்க மாட்டா ர்கள் என அவர் மேலும் தெரி வித்தார். (4-6-250)

## திருட்டில் ஈடுபட்டவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை பகுதியில் இரவு வேளைகளில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடு வர் என்ற குற்றச்சாட்டில் ஒரு வரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வடமராட்சி துன்னாலை வீதியில் இரவு வேளைகளில் வீதியால் செல்வோரின் நகை களை பறிமுதல் செய்பவர் என்ற குற்றச்சாட்டிலேயே அதே பகு தியைச் சேர்ந்த குறித்த நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-6-60)

## நீண்ட நாட்களின் பின்னர் மன்னாரிற்கு வந்த மண்ணெண்ணெய்

### அதிகாலை முதல் வரிசை



(மன்னார்)

பள்ளிமுனை வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் நீண்ட நாட்களுக்கு பின் னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மண்ணெண்ணெய் விநியோ கிக்கப்பட்டு வரும் நிலையில் அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து மண்ணெண்ணையை பெற்ற னர்.

குறிப்பாக ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்களுக்கும் 500 ரூபாய்க்கான மண்ணெண் ணையே வழங்கப்பட்டு வரு கின்றன.

குடும்ப அட்டைகள் வழங்க ப்படாத, இல்லாத நபர் களுக்கு கிராம உத்தியோகத் தர்களின் உறுதிப்படுத்தலின் பின்னரே மண்ணெண்ணெய் வழங்கப் பட்டு வருகின்றது. (4-6-285)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வடமரா ட்சி புலோலி தென் மேற்கு பகுதியில் இடம்பெற்றுள் ளது.

குறித்த பகுதியில் 25 வயதுடைய இளைஞர் ஒரு வர் 52 கிராம் 10 மில்லி கிராம் கஞ்சாவை உடைமை யில் வைத்திருந்த குற்றச் சாட்டிலேயே பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய் யப்பட்டுள்ளார். (4-6-60)

## கிளி.மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பிரித் தானியா எடின்புரோ நகரத்தில் நடைபெறும் வடக்கு, கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பு மரதன் ஓட்ட நிகழ்வுக்கு வலு சேர்க்கும் முகமாக கிளிநொச்சி யிலும் நேற்று மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த மரதன் ஓட்ட நிகழ்வு பரந்தன் சந்தியில் இருந்து பசுமைப்பூங்கா வரை முன் னெடுக்கப்பட்டது.

ஆண், பெண் இருபாலரும் மரதன் ஓட்டப் போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார் கள். குறித்த நிகழ்வில் பாரா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் கலந்து கொண்டி ருந்தார். (4-6-316)



யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாட்டுப்பற்றாளர் ஐயாத் துரை நடேசனின் 18 ஆவது நினைவேந்தலும் நூல் வெளியீடும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமை யில் நடைபெற்றன. (படம்:-சிவசாந்தன்)



கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடு பகுதியில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபை ஆலயத்தின் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. (படம்:-தேவானந்தன்)

## கொடிகாமம் மாவீரர் துயிலுமில்ல காணி சுவீகரிக்க முயற்சி

### சாவகச்சேரி பிரதேச சபை கண்டனம்

(சாவகச்சேரி)

கொடிகாமத்தில் அமைந் துள்ள மாவீரர் துயிலுமில்ல காணியை பாதுகாப்பு அமை ச்சிற்கு சுவீகரித்துக் கொடுக்க முன்னெடுக்கப்படும் நடவடிக் கைக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் உப தவிசாளர் செ.மயூரன் தனது கண்டன த்தை தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் தனது கண்டனத்தை தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கை யில்,

கடந்த 20 ஆம் திகதி தென் மராட்சிப் பிரதேச செயலர், நில அளவைத் திணைக்கள அதி காரிகள் இணைந்து கொடிகாம த்தில் அமைந்துள்ள மாவீரர் துயிலுமில்ல காணி மற்றும் அதனைச் சூழவுள்ள தனி யார் காணிகளை சுவீகரித்து/ கொள் வனவு செய்து பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்குவத ற்கான முன் ஆயத்தங்களை மேற்கொண்டி ருந்த நிலையில் குறித்த செயற்பாடு பொதுமக் கள் மற்றும் மக்கள் பிரதி நிதி களால் தடுத்து நிறுத்தப்பட்டி ருந்தது.

இச் செயற்பாட்டினை முற்று முழுதாக கண்டிக்கிறோம். குறி த்த தனியார் காணிகளை உரி மையாளர்கள் பல தேவைக ளுக்காக விற்க முன்வந்துள் ளனர்.

எனவே குறித்த காணிகளை தனவந்தர்கள் கொள்வனவு செய்து தனிப்பட்ட அல்லது பொதுத் தேவைகளுக்காக காணியைப் பயன்படுத்த முன்வர வேண்டும் எனத் தெரிவித்தார். (4-6-30)

## புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித அன்னை வேளாங்கண்ணி ஆலய வரு டாந்த திருவிழா-2022 இன்று 30 ஆம் திகதி காலை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவு ள்ளது.


ஆயத்த வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச் செபமாலையோடு ஆரம்பமா கும்.

நற்கருணைப் பெருவிழாத் திருப்பலி எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அன்னையின் திருவிழா திருப்பலி மறுநாள் 4 ஆம் திகதி காலை 6 மணிக்கு திருச்செப மாலையோடு ஆரம்பமாகும் என ஆலய பங்குத்தந்தை அறி வித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு நோயாளர்கள் சடுதியாக அதிகரிப்பு



(கொழும்பு)


**நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீரா தெரிவித்துள்ளார்.**

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் மொத்தமாக 24,942 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

எனினும் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23,118 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி)

# பாரிய அளவில் கைப்பற்றப்பட்ட கஜமுத்து



(அம்பாறை)

75 கஜமுத்துக்களை வைத்திருந்த 67 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை இக்கினியாகல பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் விசேட அதிரடிப் படை கைது செய்துள்ளது.

அம்பாறை முகாம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவ்வாறான 75 முத்துக்களை வைத்திருந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

வரலாற்றில் ஒரு பகுதியில் இருந்து கைப்பற்றப்பட்ட மிகப்பெரிய அளவிலான முத்துக்கள் இது என்று அதிரடிப் படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேலதிக விசாரணைகளுக்காக குறித்த சந்தேகநபர் இக்கினியாகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி)

## மத்திய வங்கியின் செயற்பாடுகளை

# சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கும்

## ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

மத்திய வங்கியின் செயற்பாடுகளை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்கான சகல ஒத்துழைப்பையும் அரசாங்கம் வழங்கும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் ஜனாதிபதி கோட்டாபய உறுதியளித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதிச் சபையின் உறுப்பினர் சஞ்சீவ ஜயவர்தன உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுக்கள் வெற்றிகரமாக நிறைவடை யும் என்று எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி ஆளுநர் இதன் போது தெரிவித்தார்.

பணவீக்கத்தினைக் குறைத்தல் மற்றும் பொருளாதாரத்தை பலப்படுத்தல் என்பவற்றுக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இதன் போது ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந் நிலையில் அரசியல் தலையீடுகள் இன்றி இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பினை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்வெட்டை கைவிட 100 மில்லியன் டொலர்கள் தேவை

## அமைச்சர் காஞ்சன தகவல்

(கொழும்பு)

இலங்கையில் தற்போதைக்கு நடைமுறைப்படுத்தப்படும் மின்வெட்டை முற்றாகக் கைவிடுவதாயின் மாதந்தோறும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நீர் மின்சாரம் அல்லது அனல் மின்சாரம் எந்த வகையிலாவது 24 மணிநேரமும் மின்சாரத்தை வழங்குவது தற்போதைக்கு முடியாத காரியம்.

அவ்வாறு வழங்குவதாயின் 31,000 மெட்ரிக் தொன் டீசல், 63,000 மெட்ரிக் தொன் எஞ்சின் ஒயில் மற்றும் 11,000 மெட்ரிக் தொன் நெப்தா என்பன தேவைப்படும். அவற்றைப் பெறுவதாயின் மாதந்தோறும் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என்றும் அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 220 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 240 | 240 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 330 | 450 |
| தக்காளி | 800 | 600 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 130 | 120 |
| கோவா | 250 | 280 | 220 | 300 |
| கரட் | 200 | 330 | 330 | 400 |
| பூசணி | 120 | 120 | 100 | 160 |
| புடோல் | 250 | 250 | 220 | 300 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 150-400 | 480 |
| பெரிய வெங்காயம் | 240 | 230 | 200 | 240 |
| பாகற்காய் | 650 | 600 | 800 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 400 | 240 | 160 |
| லீக்ஸ் | 220 | 250 | 230 | 250 |
| பீற்றூட் | 380 | 400 | — | 400 |
| கறிமிளகாய் | 500 | 650 | — | 500 |
| முருங்கைக்காய் | 1400 | 1800 | 1400 | 1200 |
| போஞ்சி | 600 | 700 | — | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | — | 300 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 100 | 100 |
| தேசிக்காய் | 600 | 500 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-60 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | 600 | — | — |
| முள்ளங்கி | 80 | 150 | — | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 200 | — | 150 |

# உலக சுகாதார அமைப்புடன் கூட்டு வங்கிக் கணக்கு



(கொழும்பு)

உலக சுகாதார அமைப்பும், இலங்கையின் சுகாதார அமைச்சும் இணைந்து கூட்டு வங்கிக் கணக்கு பொறிமுறை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளன.

வெளிநாட்டு நாடுகளின் உதவியை ஏற்றுக்கொள்ளும் வகையில், இது சிறந்த வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிக்கு மத்தியில் மருந்து இறக்குமதியாளர்கள் உள்நாட்டில் டொலரை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தநிலையில் பற்றாக் குறையாக உள்ள மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை பெற்றுக்கொள்வதை துரிதப்படுத்த உலக சுகாதார அமைப்புடன் இணைந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்திய கலாநிதி அலகா சிங் உடன் அண்மையில் நடத்திய சந்திப்பை அடுத்து இந்த கூட்டு வங்கிக் கணக்குக்கு உலக சுகாதார அமைப்பு, 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வைப்பிலிட உடன்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு விசேட விடுமுறை

(கொழும்பு)

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு விசேட வாராந்த விடுமுறை திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலை காரணமாக இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, சுகாதாரத் துறை ஊழியர்கள் அனைவருக்கும் வார நாட்களில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது. சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு எரிபொருள் நிரப்புவதில் முன்னுரிமை அளிக்கும் வகையில் வழங்கப்பட்ட அட்டை பயனற்றுப் போயுள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(நேற்றைய தொடர்ச்சி)

## அம்புலிமாமா

# அனுபவபூர்வக் கல்வி



விமலானந்தரும் முத்துவைப் பரீட்சித்து விட்டு நீலகண்டனிடம் "உங்கள் மகனுக்கு ஓரளவு உலக ஞானம் இருக்கிறது. நான் வைத்த பரீட்சையில் தேறியும் இருக்கிறான். ஆனால் அவனுக்காக நீங்கள் ஆண்டுக்கு இரண்டாயிரம் வராகன்கள் கொடுக்க வேண்டும். இவனது படிப்பு எப்போது முடியும் என்பதை இப்போது சொல்ல முடியாது. நான், இவன் என்னிடம் படித்தது போதும் என நினைத்தால் மறு விநாடியே இவனை இங்கிருந்து அனுப்பி விடுகிறேன்" என்றார்.

நீலகண்டனும் இரண்டாயிரம் வராகன்களை விமலானந்தரிடம் செலுத்தி முத்துவை அவரது குருகுலத்தில் சேர்த்து விட்டுத் திரும்பினார். முத்து வேண்டா வெறுப்பாகத்தான் அந்த குருகுலத்தில் அடி எடுத்து வைத்தான்.

விமலானந்தரும் "முத்து உனக்கு நல்ல அறிவு இருக்கிறது. நீ இங்கு நான் சொல்லிக் கொடுப்பதைக் கவனமாகக் கற்று வா. நீ வாழ்க்கையில் முன்னேற்றம் அடையும் வாய்ப்புக்கிட்டும். உன் தந்தை படும் சிரமத்திற்கு தக்க பலனும் கிடைக்கும்" என்றார்.

முத்துவும் அந்த குருகுலத்தை சுற்றிப் பார்த்தான். அங்கு பல மாணவர்கள் இருந்தனர். அவர்களில் சிலர் இலவசக் கல்வி பெறுபவர்கள். மற்றவர்கள் செலுத்தும் கட்டணமோ ஆளுக்கு ஆள் வித்தியாசப்பட்டிருந்தது. சிலர் ஆண்டுக்கு ஆயிரம் வராகன்களாகவும், சிலர் இரண்டாயிரம் வராகன்களாயும் வேறு சிலர் இதற்குச் சற்று அதிகமாகவோ குறைவாகவோ கட்டணம் செலுத்தி வந்தனர்.

இதையெல்லாம் அறிந்த முத்து "சரி, என் குரு ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும். இங்கு நான் வந்தது கல்வி கற்க. ஆனால் புதுப் புது அனுபவங்கள் எனக்குக் கிட்டுகின்றன. எனவே நான் ஆசிரியர் கூறுவதையும் நன்கு கேட்டுக் கொள்கிறேன்" என நினைத்து படிப்பில் மிகவும் கவனம் செலுத்தினான்.

அந்த மாணக்கர்களில் முத்துவுக்கு மோகனன் என்பவன் நண்பனானான். அவன் முத்துவின் அறிவுத் திறன் கண்டு வியந்து "உனக்கு என்ன வெல்லாமோ தெரிந்திருக்கிறதே. இதை நீ நம் குரு சொல்லியா தெரிந்து கொண்டாய்? நீ அவரது அன்பிற்குப் பாத்திரமாகி தலைமை சீடனாகவும் ஆகிவிட்டாயே" என்றான்.

அப்போது முத்து "இதெல்லாம் நம் குரு கற்றுக் கொடுக்கவில்லை. என் அனுபவத்தால் நானே அறிந்து கொண்டவை" என்றான். ஆனால் மோகனன் இதை நம்பவில்லை.

மோகனனின் தந்தை குருகுலத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ஐந்நூறு வராகன்கள் வீதம் கட்டணம் செலுத்தி வந்தார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




பேயும் கழுதையும் இழுத்துச் சென்ற தேரில் இரத்த ஆடையனாய் இராவணன் தென்திசை நோக்கி இறுதி யாத்திரை செய்வதைக் கனவில் அவள் கண்டாள்.

அரிமா இரண்டு, புலிகளோடு வந்து யானைகளை அடித்துக் கொன்ற கனவும் கருத்துள்ளதாய் இருந்தது. இராமனும் இலக்குவனும் அனுமனோடு வந்து இலங்கைவேந்தனை வெல்லும் நிகழ்ச்சி, இதில் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. காட்டில் சிறைபட்டிருந்த தோகை மயில், விடுதலை பெற்று, விண்ணில் பறந்து சென்றது என்றும் கூறினாள். சோகத்தில் அகப்பட்டிருந்த சீதைக்கு விரைவில் விடுதலை கிடைக்கும் என்பதை அது தெரிவித்தது. நம்பிக்கை ஊட்டும் திரிசடை கனவுகள், அவள் விரும்பிக் கேட்பவையாய் அமைந்தன.

திருமகள், திருவிளக்கு ஒன்றினை ஏந்தி இராவணன் மனையிலிருந்து வெளிப்பட்டு வீடணன் கோயிலில் அடி எடுத்து வைத்தாள். ஆட்சி மாறும் இராவணன் வீழ்ச்சியை இக் கனவு உணர்த்தியது.

அக் கனவுகளைத் தொடர்ந்து விருப்புற்றுக் கேட்டு மறுபடியும் திரிசடையைக் கண்ணுறங்க வேண்டினாள் சீதை.

சீதை இருக்குமிடம் அடைந்த அனுமன் கண்ட காட்சி, அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது; நம்பிக்கை நட்சத்திரமாய் அவள் ஒளிவிடுவதைக் கண்டான்; செல்வச் சிறப்பும் இன்பக் களிப்பும் அதிகார ஆதிக்கமும் மிக்க இராவணன் ஆதிக்கத்தில் அவள் ஒளி தரும் சுடர் விளக்கமாக இருப்பதை அறிந்தாள். 'அறம் அழியவில்லை' என்று அகம் மகிழ்ந்தான்; "கற்பின் மாட்சியால் அவள் பாராட்டும் சிறப்பினை உடையவள்" என்பதை அறிந்தான்; பிறந்த மனைக்கும் புகுந்த வீட்டுக்கும் பெருமை தேடித் தந்திருக்கிறாள்" என்று பாராட்டினான் மாசுபடியாத மாணிக்கத்தைக் கண்டெடுத்த மனநிறைவு அவனை அடைந்தது; 'இழந்த வாழ்வு மீண்டும் இராமன் பெறுகிறான்' என்பது அவனை மகிழ்ச்சியில் ஆட்டிப்படைத்தது.

"கல்லைப் பெண்ணாக்கிய இராமன் மனைவியின் நெஞ்சு, "கல்லைப் போன்றது" என்று கண்டு கொண்டான்; பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் திண்மை அவளிடத்தில் இருந்ததைக் கண்டான்.

**இராவணன் நேர் உரை**

எதிர்பாராதவாறு இலங்கைவேந்தன் இராவணன், ஆடை அலங்காரத்தோடும், அரம்பை மகளிரும் பணிப்பெண்களும் அவனைச் சூழ்ந்து வரவும் சீதையிருக்கும் இடம் நாடி வந்தான்; அரக்கியரையும் அரம்பையரையும் விலகச் சொல்லித் தான் மட்டும் தனியனாய்ச் சீதையை நெருங்கினான் அவள் கடும் புலிக்கு நடுங்கும் இளமான் ஆனாள்; ஆசை வெட்கம் அறிவதில்லை நாக்கூசாமல் தன் ஆசைகளை வாய்விட்டுப் பேசினான்; தன்னை அவள் அடைவதால் அவளுக்கு உண்டாகும் நன்மைகளை எடுத்து உரைத்தான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தின் வேட்கைதனை அழித்துவிட்டால் அப்போது சாவும் அங்கே அழிந்து போகும்.
– பாரதியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்த நாட்டின் கொடூரத்தை காட்டும் சிறுமி ஆயிஷாவின் மரணம்

களுத்துறை மாவட்டத்திலுள்ள பண்டாரகம அட்டுளுகமவைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமி பாத்திமா ஆயிஷாவின் மரணம் மனித மனங்களை நடுங்க வைத்துவிட்டது.

ஆம், வீட்டில் இருந்து கடைக்குச் சென்ற அந்தச் சின்னஞ்சிறுபாலகி வீடு திரும்ப முடியாதளவில் ஈனர்களால் கொலை செய்யப்பட்டுவிட்டாள்.

கடைக்குச் சென்ற பிள்ளை இன்னமும் வீடு திரும்பவில்லை என்று தேடமுற்பட்ட போது, சதுப்புநிலத்தில் அந்தச் சின்னஞ்சிறுபாலகியின் உயிரற்ற உடல் புதையுண்டு கிடப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும்போது ஒன்பது வயதுப் பாலகிக்கு நேர்ந்த கதி இதுவெனும்போது, இலங்கையில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு எவ்வாறு உள்ளதென்பதற்கு இதைவிட்ட வேறு உதாரணம் தேவையில்லை.

இவை ஒருபுறமிருக்க, சிறுமியின் கொலை தொடர்பில் பொலிஸார் மேற்கொண்டுவரும் விசாரணைகளில் பிரஸ்தாப சிறுமியின் தந்தை போதைவஸ்துக்கு அடிமையானவர் என்ற திடுக்கிடும் தகவல் தெரியவந்துள்ளது.

அந்தோ! கொடுமை. இலங்கை, பொருளாதாரத்தால் மட்டும் வீழ்ந்து போகவில்லை.

மாறாக போதைவஸ்து பாவனையாலும் நாடு சீரழிந்து போயுள்ளது என்பது உண்மை.

என்ன செய்வது சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாருக்கும் போதைவஸ்து வியாபாரிகளுக்கும் நிறைந்த தொடர்புகள் இருக்கின்றன.

தவிர, அரசியல்வாதிகளும் அரசியல் செல்வாக்குடையவர்களும் போதைவஸ்து வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும் சில வருடங்களில் போதைவஸ்துக்கு அடிமையாகியவர்கள் மனநிலை குன்றியவர்களாக, வீதிகளிலும் தெருக்களிலும் வீழ்ந்து கிடப்பர்.

இந்த அடிப்படையில்தான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போதைவஸ்துக் கடத்தலை முற்றாகத் தடுக்க வேண்டும் என்றும் போதைவஸ்து கடத்தல் மற்றும் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்.

எனினும் அந்த விடயத்திலும் போதைவஸ்து வர்த்தகர்களுக்கே அரசியல் ஆதரவு இருந்தது.

இதனால் குறித்த மரண தண்டனையை நிறைவேற்ற முடியாமல் போயிற்று.

இதன் விளைவு எவ்வாறாக அமையப் போகிறது என்பதை காலம் நமக்கு நிச்சயம் உணர்த்தி நிற்கும்.

எதுஎவ்வாறாயினும் பாலகி பாத்திமா ஆயிஷாவின் மரணம் தொடர்பில் உரிய நீதி விசாரணை நடந்தாக வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இதில் பக்கச்சார்புகளும் செல்வாக்குகளும் தலைதூக்காமல் பார்த்துக் கொள்வது மக்கள் நலன்சார் சமூக அமைப்புக்களின் தலையாய கடமையாகும்.

# 21 ஆவது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்ட மூலம் தொடர்பில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திற்குள் நடைபெறவுள்ள இந்த கலந்துரையாடலில் அரசியலமைப்பின் 21ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பிலான கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 21 ஆவது திருத்தம் தொடர்பில் அடுத்த வாரத்திற்குள் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு தரப்பினரின் யோசனைகள், எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கப்படும் திருத்தங்கள் என்பவற்றை உள்ளடக்கி 21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை ஜுன் மாதம் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பின் 21ஆவது திருத்தத்திற்கு ஆதரவளிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடிய பின்னர் இறுதித் தீர்மானமெடுக்கப்படுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற குழு கூட்டத்தை ஜனாதிபதி இன்று கூட்டவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (4-7)

# 21 ஆவது திருத்தம் அரசியல் சூதாட்டம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக முடியாதவர்கள், சதித்திட்டத்தின் மூலம் ஜனாதிபதி யாவதற்காக முன்னெடுக்கப்படும் அரசியல் சூதாட்டமே 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஆகும்.

அதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள திருத்தத்தினை புறந்தள்ளி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்கும் திருத்தமொன்று அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

காலி மற்றும் கம்பஹா மாவட்டங்களிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் சமூக ஊடக செயற்பாட்டாளர்களுடன் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தமானது அனைவராலும் எதிர்பார்க்கப்படும் மாற்றத்திற்கான வழியமைப்பதாக இருக்க வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச்சென்ற நிறைவேற்று திகார முறைமை நீக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

# சிறுமி கொலை தொடர்பில் விரைவில் நீதி கிடைக்கும்

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

பண்டாரகம - அட்டுளுகமவில் சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் கொல்லப்பட்ட சம்பவத்தில் விரைவில் நீதி கிடைக்கும் என தாம் உறுதியளிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஈவிரக்கமற்ற முறையில் கொல்லப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார். (4-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குரு தானாக வருவார்



ஒரு குடும்பத் தலைவனுக்கு அடிக்கடி சினம் வருகிறது என்று வைத்துக்கொள்வோம். அவனது மனைவி மக்கள் மனநிலைகள் அதனால் பாதிக்கப்படும். அவர்கள் சோகம் கப்பிய முகத்தினர் ஆவார்கள். அவர்களது மனவலிமை குன்றிப் போகும். தோல்வி மனப்பான்மை அவர்களிடத்தில் தோன்றும். மறைவாக தீங்கு செய்யும் குணம் உடையவர்கள் ஆவார்கள். அவர்களும் சிடுமூஞ்சிகள் ஆனாலும் ஆவார்கள். எளிதில் சினம் வயப்படும் பலவீனத்தையும் அவர்கள் பெற்றுவிடுவார்கள். அம்மட்டோடு போகுமா, போகாது; சினம் ஒரு சங்கிலி போன்றது. தொற்று நோய் போன்றது என்றும் சொல்லலாம்.

ஒரு அதிகாரியின் வீட்டுக் குழந்தை அதன் தாயாருக்கு தன் பிடிவாதப் போக்கினால் கோபம் மூட்டுகிறது. அதன் விளைவினால் அந்த அம்மா தன் கணவனிடம் எரிந்து விடுகிறாள். அந்த அதிகாரி இந்தக் கோபத்துடன் தன் அலுவலகத்திற்குச் சென்று தன் பணியாளனிடம் சிடுசிடு எனப் பேசுகிறார். மனம் புண்பட்ட பணியாளன் வீட்டிற்குப் போய்த் தன் மனைவியிடம் காரணமில்லாமல் கோபித்துக் கொள்கிறான். அந்த அம்மாள் உள்ளக் குமுறலுடன் இருக்கும் போது அவள் ஆத்திரம் தீர அந்தக் குழந்தையை அடித்து விடுகிறாள். இப்படி சினமானது சங்கிலித் தொடர் போல சென்று பலருக்கும் துன்பத்தை விளைவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 74

அத் தொகுதிகளாவன ரம்புக்கனை (98), மாவனெல்ல (54), கேகாலை (64), கலிகமுவ (60), வறக்காப்பொல (63), அரநாயக்க (80), யட்டியந்தொட்டை (48), ருவண்வெல்ல (56), தெஹியோவிட்ட(50) என்பனவாகும்.அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் 'பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விவரம் அட்டவணை (S4) இல் தரப்பட்டுள்ளது.

**சுருக்கமாக கூறினால் 3 பிரதேச செயலகங்கள் கூறாக்காமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 3 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும், 4 பிரதேச செயலக பிரிவுகள் 3 தொகுதிக்குள் பிரிக்கப்பட்டும், 1 பிரதேச செயலக பிரிவு 4 தொகுதிக்குள் பிரிக்கப்பட்டும் எல்லா இனத்தவர்களின் சமநிலை பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து கேகாலை மாவட்டம் 9 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**

அட்டவணை(S4) கேகாலை மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தோகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ரம்புக்கனை | 90790 | 1176 | 3756 | 91 | 95813 |
| மாவனெல்ல | 52568 | 980 | 34811 | 91 | 88450 |
| கேகாலை | 91045 | 2781 | 1133 | 113 | 95072 |
| கலிகமுவ | 82886 | 3126 | 1158 | 66 | 87236 |
| வறக்காப்பொல | 84164 | 3376 | 5120 | 49 | 92709 |
| அரநாயக்க | 90741 | 2685 | 3263 | 30 | 96719 |
| யட்டியந்தொட்டை | 63699 | 29824 | 1577 | 105 | 95205 |
| தெஹியோவிட்ட | 79654 | 11555 | 1921 | 80 | 93210 |
| மொத்தம் | 635547 | 55503 | 52739 | 625 | 744414 |




## எதிர்காலத்தில் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய இடுவுகள் பற்றி எல்லை நிர்ணயக் குழுவின் கருத்து

மாவட்டங்களுக்கிடையே மாகாண சபைத் தேர்தற்றொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வது தொடர்பாக குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு அரசியல் கட்சிகள், பொதுசனஅமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து கருத்துக்களையும் மற்றும் முன்மொழிவுகளையும் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தலுக்கு பதில் அளிக்குமுகமாக வாய் மூலமும் எழுத்து மூலமும் 678 பதில்கள் கிடைக்கப்பெற்றன.

அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அநேக்மான பரிந்துரைகள் குழுவின் பணிப்பாணைக்குட்பட்டதாக இருந்ததால் எல்லை நிர்ணயம் செய்யும் போது கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மற்றைய பிரேரணைகள் குழுவின் பணிப்பாணைக்குட்பட்டு இருக்கவில்லை.இப் பரிந்துரைகள் குழுவின் பணிப்பாணைக்குட்பட்டு இல்லாதபோதும் அவற்றில் கூறப்பட்டவை தேசிய நலன்சார்ந்தவை ஆதலால் மேலதிக கவனத்திற்கு தகுந்தவையாக இருந்தன.

இவற்றை கருத்திற்கொண்டு பொதுமக்களால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளிலுள்ள இடுவுகள்/பிரச்சினைகள் சம்பந்தமாக குழு ஆராய்ந்து தமது உறுப்பினர்களின் பொதுக்கருத்துத் தொடர்பாகவும் எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது. மக்களால் கூறப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

1) சிறுபான்மையினர் வாழும் குறிப்பிட்ட பகுதிகளுக்காக சிறிய ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளை நிர்ணயித்தல் வேண்டும்.

2)தேசிய, மாகாண மட்டத்தில் வாழும் சிறுபான்மையினருக்கான பிரதிநிதிகள் சார்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி பொதுமக்கள் பின்வருமாறு கருத்து தெரிவித்தனர். வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழும் தமிழர்களும் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களும் அதே போன்று வடக்கிலும் கிழக்கிலும் வாழும் சிங்களவர்களும் ஒவ்வொரு மாகாணசபையிலும் அவர்களது பிரதிநிதித்துவத்தை மாகாணசபை முறையின் கீழ் உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர். அவர்களது சனத்தொகை அதிகமாக இருக்கின்ற பகுதிகளை கருத்திற் கொண்டு அதற்கேற்ப தேர்தல் தொகுதிகளை உருவாக்குவதோடு அவர்களின் சமுதாய நலன்களை பாதுகாக்கதக்க வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் அவர்களது அரசியல் பிரதிநிதித்துவம் அமைய வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

3) சிறுபான்மையினருக்காக சிறிய தேர்தல் தொகுதிகளை பிரிப்பதற்காக சனத்தொகை அளவை குறைப்பதும் சராசரி சனத்தொகை விலகல் வரம்புகளை கூட்டுவதும் சம்பந்தமாக பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்தனர். முஸ்லிம்களும் இந்திய வம்சாவழி மலையக தமிழர்களும் வடக்கு மற்றும் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வாழுகிறார்கள். அதே போல் வட மாகாணத்தில் சிங்களவர்களும் இந்திய வம்சாவழி மலையக தமிழர்களும் வாழ்வதால் அவர்களது சிறிய சனத்தொகையையும் இனசெறிவையும் கருத்திற் கொண்டு அதற்கு ஏற்றவாறு அந்த புவியியல் பகுதிகளில் தேர்தல் தொகுதிகளை உருவாக்குமாறு அச் சமூகங்கள் பல பிரேரணைகளை முன்வைத்திருந்தனர்.

அத்தோடு சராசரி சனத்தொகை விலகல் வரம்புகளை அம் மாவட்டங்களுக்கு கூட்டி சிறுபான்மையினருக்காக சிறிய மாகாணசபை தேர்தல் தொகுதிகளை உருவாக்க வேண்டும். என்றும் கருத்து தெரிவித்திருந்தனர்

4) பல்சமூகங்களுக்கான பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளை உருவாக்க வேண்டும் என்பது மக்களின் அடுத்த வேண்டுதலாக இருந்தது. அதாவது, சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், இந்திய வம்சாவழி மலையக தமிழர்கள் ஆகிய நான்கு சமுதாய ஆர்வலர்களும் பல பிரேரணைகளை முன்வைத்திருந்தனர். இப் பிரேரணைகள் சிறுபான்மை சமூகத்தினால் மட்டுமல்ல அம் மாவட்டத்தில் வாழும் பெரும்பான்மை சமூகத்தினாலும் சமர்பிக்கப்பட்டிருந்தது. அதில் கூறப்பட்டதாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட ஒரு பகுதியில் கூட்டாக வாழ்கின்ற சமுதாயங்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு சராசரி சனத்தொகை விலகல் வரம்புகளை கூட்டி பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படல் வேண்டும் என்பதாகும்.

5) பழைய பாராளுமன்ற தேர்தல் தொகுதிகளையும் உள்ளூராட்சி சபைகளையும் அடிப்படையாக வைத்து தேர்தல் தொகுதிகளை உருவாக்க வேண்டும் என்பது அவர்களது அடுத்த வேண்டுதலாக இருந்தது.

பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) மற்றும் உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் கருத்திற் கொண்டு மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளை உருவாக்குமாறு பல்வேறு சமூகங்கள் பல பிரேரணைகளை முன்வைத்திருந்தன.

நடைமுறையில் உள்ள தேர்தல் கட்டமைப்புகளை பாவிப்பதன் மூலம் மக்களுக்கு எந்த விதமான பிரச்சினையுமின்றி எல்லா மட்டத்திலும் (சபைகளிலும்) உள்ள தேர்தல் தொகுதிகளை அறிந்து கொள்ளவும் மற்றும் நடைமுறை தேவைகளுக்காக மற்றைய (சபைத்) தேர்தல் தொகுதிகளை கூறுபோடுவதை குறைப்பதற்குமான தேவைகளையும் இதன் மூலம் உணர்ந்து கொள்ளமுடியும் என்பது அவர்களது கருத்தாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயமான...

யர்கள் உள்ளிட்ட 22 பயணிகளுடன் நேபாளத்தின் போக்கரா நகரில் இருந்து ஜோம் சோமுக்கு நேற்றுக் காலை கிளம்பியது.

இந்நிலையில் விமான நிலைய அதிகாரிகளுடனான தொடர்பை விமானம் இழந்துள்ளதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் தெரிவித்தது. விமானத்தில் இருந்த மற்ற அனைவர்களும் நேபாளத்தை சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்தது.

நேபாளத்தின் மஸ்டங் பகுதியில் உள்ள கோவாங் என்ற இடத்தில் விமானம் விழுந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் நிலை என்ன என்பது குறித்து எந்த தகவலும் இதுவரை வெளியாகவில்லை. அனைவரும் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-7)

(முன்னர் வந்த செய்தி உள்ளே)

## மருத்துவபீட...

மருத்துவ பீட மாணவர்கள் திரண்டமை காரணமாக உலக வர்த்தக மையம் முன் பதற்றநிலை ஏற்பட்டதுடன் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டதுடன் ஆர்ப்பாட்டக்காரர்களை நோக்கி கண்ணீர்ப் புகைக்குண்டு மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டது. (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1250
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 7 7 3 9 9 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 3012
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
0 30 47 62 66
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1118
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
E 03 05 20 26 53

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.29
சீட்டிழுப்பு இலக்கம் 079
வெற்றி இலக்கங்கள்
தனுசு 21 27 44 48 தனுசு

மஹஜன சம்பத
திகதி 2022/05/29
சீட்டிழுப்பு இலக்கம் 4770
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
V 2 7 0 9 8 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.05.29
சீட்டிழுப்பு இலக்கம் - 800
C 05 38 55 62
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்


## இலங்கை...

பாளர் நாயகம் கலாநிதி டெட்ரோஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் பதிவொன்றினூடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் ஆரம்ப நிலை சுகாதார சேவைகளை தொடருவதற்கு தேவையான ஆதரவை வழங்குவது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் கவனம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார ஸ்தாபன தலைமையகத்தில் நடைபெற்றுவரும் உலக சுகாதார மாநாட்டின்போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசேல குணவர்த்தன தலைமையிலான குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (4-7)

## முட்டை...

விலை 50 ரூபாய் வரையில் அதிகரிக்கக்கூடும் என அகில இலங்கை கோழிப் பண்ணை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோழி இறைச்சி கிலோ ஒன்றின் விலை 1,200 ரூபாய் வரையில் அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## தமிழக அரசி...

பைகளில் பொதியிடும் பணிகள், தூத்துக்குடி துறைமுகத்தில் இடம்பெற்று வருகின்றன.

குறித்த பணிகளை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ் ஆய்வு செய்துள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் கி.செந்தில்ராஜ், அரிசியைப் பொதியிடும் பணிகள் நிறைவடைந்ததும், தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவித்தார். (4-7)

## ஓய்வூதிய...

அமைச்சின் செயலாளர் பியந்த மாயாதுன்ன தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுக்கான கொள்கைத் திட்டத்தை ஆரம்பிக்கும் நிகழ்வு தபால் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரச சேவையில் உயர் அதிகாரியில் இருந்து சிற்றூழியர்கள்வரை தற்போது சேவைக்கு வருவதும் பிரதான செலவாக உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 10 ஆயிரமாக காணப்பட்ட அரச நிறுவனத்தின் போக்குவரத்து சேவை தற்போது 25 ஆயிரமாக உயர்வடைந்துள்ளது. குறைந்த வருமானம் பெறும் ஒரு அரச சேவையாளர் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் அரச சேவையாளர்களின் சம்பள அதிகரிப்பு சாத்தியமற்றது. ஒருவேளை அதிகரிக்கப்பட்டால் சம்பளம் பெறாத தரப்பினரின் தாக்குதலை எதிர்கொள்ள நேரிடும் அந்தளவிற்கு சமூக கட்டமைப்பில் பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

பெரும்போக விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் சிறுபோக விவசாயத்தின் விளைச்சல் ... குறைவாக ...

அதனை ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் பாரிய உணவு தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

அரச காரியாலயங்களை சுற்றியுள்ள இடங்களில் மேலதிக பயிர்ச்செய்கையில் ஈடுபடுங்கள். எதிர்வரும் காலங்களில் மூன்று வேளை உணவிற்கு பதிலாக இரு வேளை உணவை பெற்றுக்கொள்வதற்கு மேலதிக பயிர்ச்செய்கைகளில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7)

## அமைச்சரவை...

19ஆவது திருத்தச் சட்டத்தை மீள அறிமுகப்படுத்துவது இந்த விடயங்களில் ஒன்றாகும்.

இது தொடர்பில் கட்சித் தலைவர்கள் என்ற வகையில் தற்போது 21ஆவது திருத்தச் சட்டத்தை தயாரித்து வருகின்றோம்.

இரண்டாவது விடயம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான முயற்சியாகும். அதற்கான நேரம் மற்றும் வழிமுறைகள் கட்சித் தலைவர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் பல வீனப்படுத்தப்பட்டதன் காரணமாக பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. நிறைவேற்றதிகாரத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடியை தடுக்கும் வகையில் பாராளுமன்றம் செயற்படவில்லை என்பதே இன்றைய பிரதான குற்றச்சாட்டு. பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தும் பாராளுமன்றப் பணிகளை புறக்கணித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அமைச்சரவை அமைச்சர்களால் அனைத்தும் திட்டமிட்டு கட்டுப்படுத்தப்பட்டது.

தற்போது, பாராளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள பாராளுமன்ற முறை அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் முறை மற்றும் அரசியலமைப்புப் பேரவை ஆகியவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பாராளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம்.

தற்போதுள்ள அமைப்பை மாற்ற வேண்டும் என இளைஞர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

அவர்கள் தற்போதைய பிரச்சினைகளையும் அறிய விரும்புகிறார்கள்.

எனவே அவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க நான் முன்மொழிகின்றேன். அதில் போராட்டக் ... சேர்ந்தவர்களும்

அடங்குவர்.

நாம் தற்போது முன்வைத்துள்ள புதிய முறைமையின்படி ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சர்களின் அமைச்சரவையும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். தேசிய கவுன்சிலும் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும். பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் பாராளுமன்றத்திற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவை மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும், ஜனாதிபதியின் பணிகளை ஆராயவும், தேசிய சபையின் மூலம் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடவும் மற்ற பதினைந்து குழுக்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விடயங்களை மேற்பார்வையிடவும் ஒரு அமைப்பு உள்ளது. வேறு பல அமைப்புகளும் இதே போன்ற திட்டங்களை முன்வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன் என அவர் தெரிவித்தார். (4-7)

## தீயில்...

பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளவயது குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை தும்பளைப் பகுதியைச் சேர்ந்த வெஸ்ரன் பிரியா (வயது-24) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (4-7.60)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1745
சீட்டிழுப்பு திகதி 2022.05.22
ஞாயிற்றுக்கிழமை
M 14 21 28 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,844,740/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.22
சீட்டிழுப்பு இல : 3806
ரூ. 2,228,480/-
வெற்றி இலக்கங்கள்
43 50 52 58 E
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 173
சீட்டிழுப்பு திகதி 2022.05.22
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
09 10 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,463,100/-

ராசி
திகதி 2022-05-22
வெற்றி வாரம் 3457
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,458,610/-
வெற்றி இலக்கங்கள்
03 07 19 48
ரிஷபம்
ரூ. 6,037,660/-

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 921
2022.05.22 ஞாயிற்றுக்கிழமை
A 20 12 28 30 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 238,887,031/-

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1571
சீட்டிழுப்பு திகதி : 2022.05.22
ரூ. 2,691,580/-
வெற்றி இலக்கங்கள்
01 38 56 63 B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி The Inner Circle நிறுவனத்தின் வடக்கு மாகாண கிளைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

O/L & A/L
வயது : 18 - 28

**பதவி வெற்றிடங்கள்**

- அலுவலக உதவியாளர்
- நிர்வாக உத்தியோகத்தர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்

**பெற்றுக்கொள்ளும் சலுகைகள்**

- E.P.F & E.T.F
- அடிப்படைச் சம்பளத்துடன் 40,000/= இற்கும் அதிக வருமானம்
- தெற்காசியாவின் உயர்மட்ட தொலைத்தொடர்பு பிரதிநிதியாக செயற்படும் வாய்ப்பு

(11662)

**தொடர்பு - 076 770 7759**
**WhatsApp - 077 782 4807**



# IELTS

NEW BATCH ஆரம்பம்
Cont : 077 798 9830
By - B.Murali
Speking & Grammar Class
for Grade 7 தொடக்கம் 10 வரையான வகுப்புக்கள்.
இல.53, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(11618)



## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-4360)

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • கோப்பாய் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • புத்தூர் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • பண்டத்தரிப்பு • சங்கானை • புதுக்குடியிருப்பு • திருகோணமலை

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623
(11656)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11630)

076 825 7716 (ஆகாஸ்)


## யாழில்...

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ். சிறுப்பிட்டி சந்தி ஊடரக அதி வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியோரத்தில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய அரியாலை நாயன் மார்கட்டைச் சேர்ந்த 32 வயது இளைஞன் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த நல்லூர் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-7,33)


## வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு

திருநெல்வேலி சுற்றாடல் பலாலி வீதியில் இருந்து 150 m தொலைவில் 2011 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட வீடு, சுற்றுமதில், வெட்டு கிணறு, தண்ணீர் தொட்டி, 3 வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (11657)

**077 603 3259 M.G.R**



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெறுகின்றது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536



**அருள்**

| | | |
|---|---|---|
| இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை. | இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. |

தொ.பே:- 076 443 1576 (C-4383)



## IELTS வகுப்புக்கள்

**புதிய பிரிவுகள் 01.06.2022 அன்று ஆரம்பம்**

- 10 வருட கால IELTS அனுபவமுள்ள ஆசிரியர்
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
- தனிப்பட்ட கவனிப்புக்கள்
- 6 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கான உத்தரவாதம்
- தனிப்பட்ட நேரத் தெரிவுகள்
- மிகக் குறைந்த கட்டணங்கள்

31.05.2022 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள். (11625)

**WINSTAR CONSULTANTS (PVT) LTD**
இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
077 395 0857


## குஜராத்...

வின் குஜராத் ரைட்டன்ஸ் அணி சம்பியனானது.

ராஜஸ்தான் அணியை இறுதிப்போட்டியில் 7 விக்கெட்டுக்களால் வீழ்த்தி மகுடம் தரித்தது.

ஐபிஎல் தொடரின் இறுதிப் போட்டி அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெற்றது. இதில் குஜராத் டைட்டன்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். நிர்ணயிக்கப்ப ட்ட 20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 9 விக்கெட்டுக் களை இழந்து வெறும் 130 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

குஜராத் சார்பில் ஹர்திக் பாண்ட்யா 3, சாய் கிஷோர் 2, ரஷீத்கான், யாஷ் தயாள், ஷமி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

எட்டக் கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய குஜராத் அணி 18.1 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கைஅடைந்தது. (4-7)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 78 பரப்பு காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

**பார்வையிடும் நேரம்**
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

ஒரு பரப்பின் விலை - **நான்கு இலட்சம்**

தொடர்பு:- 077 623 4204,
077 288 0152, 076 436 5814
(642,11661)



விற்பனையாகின்றது...
ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கான, முன்னணி வாய்ந்த ஆசிரியர்களின் ஆக்கத்தில்,

## வெற்றிக்கு வழிகாட்டி

**தரம் 1, தரம் 2 மாணவர்களுக்கான,**
கணிதம் 10 , தமிழ் 10, சுற்றாடல் 10 அடங்கலான 30 மாதிரி வினாத்தாள்கள் விடைகளோடு

**தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான**
பகுதி 1, பகுதி 2 உள்ளடங்கலான 24 மாதிரி வினாத்தாள்கள் விடைகளோடு (C-4385)

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/5, முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13. தொ.பே. 077 6258778



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )**

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

**தரகர் தேவையில்லை**
(11658)

**பார்வையிடும் நேரம்**
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389,
077 241 7589 - ஜெயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.